www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

V12Acc

விருதுநகர் மாவட்டம்
அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2024

வகுப்பு 12

கால அளவு : 3 மணிநேரம் **கணக்குப்பதிவியல்** மதிப்பெண்கள் : 90

பகுதி - I

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **20×1=20**
**சரியான விடையை தேர்ந்து எடுத்து குறியீட்டுடன் எழுதுக.**

1) ஒரு கூட்டாளி ஒவ்வொரு மாத இறுதியில் ஒரு குறிப்பிட்ட தொகையை வழக்கமாக எடுத்துகொள்ளும் போது அந்த எடுப்பு மீது கணக்கிடப்படும் வட்டிக்குறிய மாதங்கள் சராசரியாக.
அ) 12 மாதங்கள் ஆ) 5.5 மாதங்கள் இ) 6.5 மாதங்கள் ஈ) 6 மாதங்கள்

2) ஒரு இனம் மற்றொரு இனத்தோடு பெற்றிருக்கும் தொடர்பினை கணிதவியல் முறையில் கூறுவது
அ) மாதிரி ஆ) முடிவு இ) தீர்மானம் ஈ) விகிதம்

3) வருவாய் செலவின கணக்கு தயாரிப்பதின் மூலம் கண்டறியப்படுவது
அ) நிதிநிலை ஆ) இலாபம்
இ) நட்டம் ஈ) உபரி அல்லது பற்றாகுறை

4) கூட்டாளி சேர்ப்பு தொடர்பாக பின்வரும் கூற்றுகளில் எது உண்மையானதல்ல
அ) கூட்டாண்மை நிறுவனமானது புதிய ஒப்பந்தத்தின் கீழ் மறு கட்டமைக்கபடும்
ஆ) கூட்டாளியின் பரஸ்பர உரிமைகள் மாறும்
இ) ஏற்கனவே உள்ள ஒப்பந்தம் முடிவுக்கு கொண்டு வரபடாது
ஈ) முந்தைய ஆண்டு இலாபநட்டம் பழைய கூட்டாளிக்கு பகிர்ந்தளிக்கபடும்

5) பயனரின் தேவைக்கேற்ப தயாரிக்கபடும் கணக்கியல் அறிக்கையானது
அ) இருப்பாய்வு ஆ) வழக்கமான கணக்கியல் அறிக்கை
இ) இருப்புநிலை குறிப்பு ஈ) குறிப்பிட்ட நோக்க அறிக்கை

6) பின்வரும் வாக்கியங்களில் எது தவறானது?
அ) காப்பு முதல் நிறுமத்தை கலைக்கும் போது செலுத்துமாறு அழைப்புவிடுக்கபடுகிறது
ஆ) வெளியிட்ட பங்கு முதல் அங்கிகரிக்கப்பட்ட பங்கு முதலைவிட ஒரு போதும் அதிகமாக இருக்ககூடாது
இ) செலுத்தபட்ட பங்கு முதல் அழைக்கப்பட்ட முதலின் ஒரு பகுதி
ஈ) பங்குகள் குறை ஒப்பமாக இருக்கும் நிலையில் வெளியிட்ட பங்கு முதல் ஒப்பிய பங்கு முதலைவிட குறைவாக இருக்கும்

7) நிறுமம் கலைப்பின் போது மட்டுமே அழைப்பு விட கூடிய பங்கு முதலின் ஒரு பகுதி _______ என அழைக்கப்படும்.
அ) முதலின காப்பு ஆ) அங்கீகரிக்கபட்ட முதல்
இ) காப்பு முதல் ஈ) அழைக்கபட்ட முதல்

8) நிலை அறிக்கை ஒரு _______.
அ) ரொக்க நடவடிக்கை ஆ) வருமான செலவு அறிக்கை
இ) கடன் நடவடிக்கை ஈ) சொத்து மற்றும் பொறுப்பு அறிக்கை

9) ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக பெற்ற நன்கொடை
அ) வருவாயின செலவு ஆ) வருவாயின வரவு
இ) முதலின செலவு ஈ) முதலின வரவு

10) கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாத போது நிறுவனத்தின் இலாபம் கூட்டாளிகளிடையே பகிர்ந்தளிக்கபடுவது
அ) சமமான விகிதத்தில் ஆ) முதல் விகிதத்தில்
இ) (அ) மற்றும் (ஆ) ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

11) பொறுப்புகளை காட்டிலும் மிகுதியாக உள்ள சொத்துக்கள்
அ) முதல் ஆ) நட்டம் இ) இலாபம் ஈ) ரொக்கம்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



12) ஒரு நிறுவனத்தின் கடந்த ஐந்து ஆண்டு இலாபங்கள் பின்வருமாறு 2014 - ரூ.4000; 2015 - ரூ.3000 ; 2016 - ரூ.5000 ; 2017 - ரூ.4500 ; 2018 - ரூ.3500

ஐந்து ஆண்டு சராசரி இலாபம் ______.

அ) ரூ.6000 ஆ) ரூ.12000 இ) ரூ.4000 ஈ) ரூ.5000

13) முகமதிப்பை விட அதிகமாக பெற்ற தொகை வரவு வைக்கபடும் கணக்கு

அ) பங்கு முதல் க/கு ஆ) பத்திரமுனைமை க/கு

இ) பங்கு ஒறுப்பிழப்பு க/கு ஈ) அழைப்பு முன்பண க/கு

14) நிதிநிலை அறிக்கைகள் வெளிக்காட்டாதது

அ) குறுகிய கால தகவல்கள் ஆ) பணம் சாரா தகவல்கள்

இ) நீண்ட கால தகவல்கள் ஈ) கடந்த கால தகவல்கள்

15) அறைகலன் கடனுக்கு வாங்கியது Tallyல் எந்த வகை சான்றாவணத்தில் பதியப்படும்.

அ) கொள்முதல் சான்றாவணம் ஆ) பெறுதல் சான்றாவணம்

இ) செலுத்தல் சான்றாவணம் ஈ) குறிப்பேட்டு சான்றாவணம்

16) கீழ்வருவனவற்றில் எது சரியானது?

அ) உயர் இலாபம் = சராசரி இலாபம் – சாதாரண இலாபம்

ஆ) உயர் இலாபம் = மொத்த இலாபம் / ஆண்டு எண்ணிக்கை

இ) உயர் இலாபம் = சராசரி இலாபம் × கொள்முதல் ஆண்டுகள்

ஈ) உயர் இலாபம் = கூட்டு இலாபம் / ஆண்டுகளின் எண்ணிக்கை

17) சரக்கிருப்பு மற்றும் முன் கூட்டி செலுத்திய செலவுகள் நீங்கலாக உள்ள நடப்பு சொத்து

அ) நிதி ஆ) காப்புகள்

இ) விரைவு சொத்து ஈ) புலனாகும் சொத்து

18) மறுமதிப்பீட்டு க/கு ஒரு

அ) ஆள்சார் க/கு ஆ) ஆள்சாரா கணக்கு

இ) சொத்து க/கு ஈ) பெயரளவு க/கு

19) Tally-ல் இருந்து வெளியேறுவதற்கு பயன்படுத்தும் சாவி

அ) Ctrl + Z ஆ) Ctrl + P இ) Ctrl + Q ஈ) Ctrl + X

20) நடப்பாண்டில் பெற வேண்டிய சந்தா இன்னும் பெறாதது

அ) ஒரு சொத்து ஆ) ஒரு பொறுப்பு இ) வருமானம் ஈ) செலவு

## பகுதி-II

**7×2=14**

**குறிப்பு : எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**வினா எண் 30க்கு கட்டாயம் விடையளிக்கவும்.**

21) நிலை அறிக்கை என்றால் என்ன?

22) உயில் கொடை என்றால் என்ன?

23) கவிதா என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி ஒவ்வொரு மாத தொடக்கத்தில் ரூ.2500 எடுத்து கொள்கிறார். சராசரி கால முறையை பயன்படுத்தி ஆண்டுக்கு 4% வட்டி கணக்கிடவும்.

24) உயர் இலாபம் என்றால் என்ன?

25) தியாக விகிதம் என்றால் என்ன?

26) கூட்டாளி விலகல் என்றால் என்ன?

27) அப்துல் வரையறு நிறுமம் ரூ.10 மதிப்புள்ள 50000 நேர்மை பங்குகளை ரூ.3 முனைமத்தில் வெளியிட்டது அனைத்து தொகையும் விண்ணப்பத்துடன் பெறபட்டது குறிப்பேட்டு பதிவு தருக.

28) கீழ்கண்ட தகவல்களிலிருந்து விரைவு விகிதத்தை கணக்கிடவும்.
நடப்பு சொத்து ரூ.4,50,000 ; நடப்பு பொறுப்பு ரூ.2,40,000 ; சரக்கிருப்பு ரூ.70,000 ; முன்கூட்டி செலுத்திய செலவு ரூ.20,000.

29) தானியங்கும் கணக்கியல் முறை என்றால் என்ன?

30) நடைமுறை முதல் என்றால் என்ன?

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பகுதி-III

**குறிப்பு : எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். 7×3=21**
**வினா எண் 40 க்கு கட்டாயம் விடையளிக்கவும்.**

31) பின்வரும் விவரங்களில் இருந்து மொத்த விற்பனை கணக்கிடவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| 2018 ஜனவரி 1 அன்று கடனாளிகள் | 1,30,000 |
| கடனாளியிடம் ரொக்கம் பெற்றது | 4,20,000 |
| விற்பனை திருப்பம் | 35,000 |
| வாராக்கடன் | 15,000 |
| 2018 டிசம்பர் 31 அன்று கடனாளிகள் | 2,00,000 |
| ரொக்க விற்பனை | 4,60,000 |

32) ஆகாஷ், பாலா, சந்துரு மற்றும் டேனியல் ஒரு நிறுவனத்தின் கூட்டாளிகள் கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாத போது பின்வருவனவற்றை எவ்வாறு மேற்கொள்வீர்?

(i) ஆகாஷ் அதிக முதல் வழங்கியுள்ளார் அவர் முதல் மீது வட்டி ஆண்டுக்கு 10% கோருகிறார்.

(ii) ஆகாஷ் இலாபத்தினை முதல் விகிதத்தில் பகிர்ந்தளிக்க வேண்டும் என்கிறார் ஆனால் பிறகூட்டாளிகள் அதனை ஒப்பு கொள்ளவில்லை.

(iii) சந்துருவால் நிறுவனத்திற்கு வழங்கபட்ட கடன் ரூ.50,000 அவர் கடன் மீது வட்டி ஆண்டுக்கு 18% கோருகிறார்.

33) ஒரு நிறுவனத்தின் கடந்த 4 ஆண்டு இலாபங்கள் மற்றும் நட்டம் பின்வருமாறு 2015 - ரூ.15,000 ; 2016 - ரூ.17,000 ; 2017 - ரூ.6,000 (நட்டம்) ; 2018 - ரூ.14,000

4 ஆண்டு சராசரி இலாபத்தில் 5 ஆண்டு கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயர் மதிப்பை கணக்கிடுக.

34) கூட்டாளி சேர்க்கும் போது மேற்கொள்ள வேண்டிய சரிகட்டுதல்கள் யாவை?

35) தியாகவிகிதம் ஆதாய விகிதம் இடையே உள்ள வேறுபாடு யாவை?

36) ராஜன் நிறுமம் ரூ.6,00,000 மதிப்புள்ள இயந்திரத்தை ஜெகன் நிறுவனத்திடம் இருந்து வாங்கியது அது பங்கொன்றுக்கு ரூ.10 மதிப்புள்ள முற்றிலும் செலுத்தபட்ட நேர்மை பங்குகளை அவர்களுக்கு செலுத்த வேண்டிய தொகைக்காக வழங்கியது. கீழ்கண்ட நிலைகளில் குறிப்பேட்டு பதிவு தரவும்.

(i) பங்குகளை முகமதிப்பில் வெளியிட்டால்

(ii) பங்குகளை 50% முனைமத்தில் வெளியிட்டால்

37) பின்வரும் விவரங்களில் இருந்து தருண் & கோ, நிறுமத்தின் ஒப்பீட்டு வருமான அறிக்கையை தயார் செய்யவும்.

| விவரம் | 2016-17 ரூ. | 2017-18 ரூ. |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 1,00,000 | 1,25,000 |
| இதர வருமானம் | 25,000 | 20,000 |
| செலவுகள் | 75,000 | 60,000 |

38) பின்வரும் விவரங்கள் வேதாரண்யம் விளையாட்டு மன்றத்தின் இறுதி கணக்குகளில் எவ்வாறு தோன்றும் என காட்டவும்.

| | |
|---|---|
| பந்து மட்டை தொடக்க இருப்பு | ரூ.3000 |
| அவ்வாண்டில் வாங்கியது | ரூ.17000 |
| பழைய பந்து மட்டை விற்றது | ரூ.2000 |
| பந்துமட்டை இறுதி இருப்பு | ரூ.4000 |

39) கணக்கியல் சான்றாவணம் குறித்து குறிப்பு வரைக.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

40) விமலா மற்றும் கமலா இருவரும் கூட்டாளிகள் 4:3 எனும் விகிதத்தில் இலாப நட்டங்களை பகிர்ந்து வந்தனர். வினிதா என்பவர் விமலாவிடம் 1/14 பங்கும் மற்றும் கமலாவிடம் 1/14 பங்கும் பெற்று கூட்டாண்மையில் சேருகிறார், புதிய இலாப பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கணக்கிடுக.

## பகுதி-IV

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **7×5=35**

41) அ) பின்வரும் விவரங்களில் இருந்து மொத்த கொள்முதலைக் கணக்கிடவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| 2017 ஏப்ரல் 1 அன்று கடனீந்தோர் | 75,000 |
| 2017 ஏப்ரல் 1 அன்று செலுத்தற்குரிய மாற்றுசீட்டு | 60,000 |
| கடனீந்தோருக்கு செலுத்திய ரொக்கம் | 3,70,000 |
| செலுத்தற்குரிய மாற்று சீட்டுக்கு செலுத்தியது | 1,00,000 |
| கொள்முதல் திருப்பம் | 15,000 |
| ரொக்க கொள்முதல் | 3,20,000 |
| 2018 மார்ச் 31 அன்று கடனீந்தோர் | 50,000 |
| 2018 மார்ச் 31 அன்று செலுத்தற்குரிய மாற்றுசீட்டு | 80,000 |

**(அல்லது)**

ஆ) நவின் நிறுமத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து

i) மொத்த இலாபவிகிதம் ii) நிகர இலாப விகிதம்

iii) இயக்க அடக்கவிலை விகிதம் iv) இயக்க இலாப விகிதம் கணக்கிடவும்.

| விவரம் | | ₹ |
|---|---|---|
| I | விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 20000 |
| II | இதர வருமானம் | |
| | முதலீடு மூலம் வருவாய் | 200 |
| III | மொத்த வருவாய் (I+II) | 20200 |
| IV | செலவுகள் | |
| | கொள்முதல் செய்த சரக்கு | 17000 |
| | சரக்கிருப்பு மாற்றம் | 1000 |
| | நிதிசார் செலவு | 300 |
| | இதர செலவுகள் (நிர்வாகம் மற்றும் விற்பனை) | 2400 |
| | மொத்த செலவு | 18700 |
| V | வரிக்கு முன் இலாபம் (III-IV) | 1500 |

42) அ) தமிழ் கல்வியில் மன்றத்தின் கீழ்காணும் தகவல்களிலிருந்து 2019 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குறிய பெறுதல் செலுத்தல் கணக்கினை தயார் செய்க.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| தொடக்க இருப்பு 1-4-2018 | 18000 | கட்டிடம் வாங்கியது | 210000 |
| வாடகை செலுத்தியது | 6000 | பணியாளர் சம்பளம் | 55000 |
| உதவிதொகை அளித்தது | 15200 | சந்தா பெற்றது | 265000 |
| நுழைவு கட்டணம் பெற்றது | 18500 | | |

**(அல்லது)**

ஆ) நற்பெயரைத் தீர்மானிக்கும் ஏதேனும் ஐந்து காரணிகளை கூறி - விளக்கவும்?

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



43) அ) பின்வரும் விவரங்களில் இருந்து உயர் இலாபத்தில் 3 ஆண்டு கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பை கணக்கிடவும்.
(i) பயன்படுத்தபட்ட முதல் ரூ.2,00,000
(ii) சாதாரண இலாப விகிதம் 15%
(iii) வியாபாரத்தின் சராசரி இலாபம் ரூ.42,000

**(அல்லது)**

ஆ) ஜாய் நிறுமம் ரூ.10 மதிப்புள்ள 10,000 நேர்மை பங்குகளை விண்ணப்பத்தின் போது ஒரு ஒதுக்கீட்டின் போது ரூ.3, முதலாவது மற்றும் இறுதி அழைப்பின் போது ரூ.2 செலுத்தும் வகையில் வெளியிட்டது. 9000 பங்குகள் வாங்க பொது மக்கள் விண்ணப்பித்துள்ளனர், இயக்குநர்கள் 9000 பங்குகளை ஒதுக்கீடு செய்து அதற்கான தொகையை பெற்று கொண்டனர் - குறிப்பேட்டு பதிவு தருக.

44) அ) சந்திரா நிறுமத்தின் பின்வரும் இருப்புநிலை குறிப்பிலிருந்து 2016 மார்ச் 31 மற்றும் 2017 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுகுறிய ஒப்பீட்டு இருப்புநிலை குறிப்பு தயார் செய்க.

| விவரம் | 31 மார்ச் 2016 | 31 மார்ச் 2017 |
|---|---|---|
| I பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் | | |
| பங்குதாரர் நிதி | 1,00,000 | 2,60,000 |
| நீண்டகால பொறுப்புகள் | 50,000 | 60,000 |
| நடப்பு பொறுப்புகள் | 25,000 | 30,000 |
| மொத்தம் | 1,75,000 | 3,50,000 |
| II சொத்துக்கள் | | |
| நிலை சொத்து | 1,00,000 | 2,00,000 |
| நடப்பு சொத்து | 75,000 | 1,50,000 |
| மொத்தம் | 1,75,000 | 3,50,000 |

**(அல்லது)**

ஆ) கணினிமய கணக்கியல் முறையின் பயன்பாடுகள் ஏதேனும் ஐந்தினை விளக்கவும்.

45) அ) ஊட்டி மனமகிழ் மன்றத்தின் பின்வரும் பெறுதல் செலுத்தல் கணக்கிலிருந்து 2018 மாாச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுகுறிய வருவாய் செலவின கணக்கை தயாரிக்கவும்.

| பெறுதல் | ₹ | செலுத்தல் | ₹ |
|---|---|---|---|
| தொடக்க இருப்பு | | விளையாட்டு பொருள் வாங்கியது | 10000 |
| கைரொக்கம் | 5000 | எழுது பொருள் வாங்கியது | 7000 |
| வாடகை பெற்றது | 10000 | கணிப்பொறி வாங்கியது | 25000 |
| முதலீடு விற்றது | 8000 | சம்பளம் | 20000 |
| சந்தா பெற்றது | 54000 | இறுதி இருப்பு | |
| | | கை ரொக்கம் | 15000 |
| | 77000 | | 77000 |

**(அல்லது)**

ஆ) நிலை முதல் மற்றும் மாறுபடும் முதல் வேறுபாடு தருக.

46) அ) சீனு மற்றும் சிவா இருவரும் கூட்டாளிகள் அவர்கள் தங்கள் இலாப நட்டத்தை 5:3 எனும் விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றனர். சுப்பு என்பவரை புதிய கூட்டாளியாக சேர்க்கும் போது அவர்கள் பின்வரும் முடிவுகளை எடுத்தனர்.
i) கட்டிடம் மதிப்பினை ரூ.40000 உயர்த்த வேண்டும்
ii) கணக்கேடுகளில் பதியபடாத ரூ.10000 மதிப்புள்ள முதலீடுகளை கணக்கில் கொண்டுவர வேண்டும்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



iii) இயந்திரமதிப்பு ரூ.14000 அறைகலன் மதிப்பு ரூ.12000 குறைக்க வேண்டும்

iv) பற்பல கடனீந்தோரில் ரூ.16000 போக்கெழுத வேண்டும்

குறிப்பேட்டு பதிவு தந்து மறுமதிப்பீட்டு க/கு தயார் செய்க.

**(அல்லது)**

ஆ) ரிச்சர்ட் மற்றும் ரிஸ்வான் 2018 ஜனவரி 1 அன்று முறையே 300000 மற்றும் 200000 முதல் கொண்டு தொழில் தொடங்கினர்.

அ) முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6% தரப்பட வேண்டும்

ஆ) ரிஸ்வான் ஆண்டுக்கு 50,000 ஊதியம் பெற வேண்டும்

இ) முதல் மீது வட்டி மற்றும் ரிஸ்வானின் ஊதியம் கழித்த பின் கழிவுக்கு பின் உள்ள இலாபத்தில் 10% ரிச்சர்ட் கழிவாக பெற வேண்டும்.

ஈ) அவ்வாண்டில் நிறுவனம் ஈட்டிய இலாபம் ரூ.3,00,000 நிறுவனம் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 31ல் கணக்கு முடிகிறது எனக் கொண்டு இலாபநட்ட பகிர்வு க/கு தயாரிக்கவும்.

47) அ) ராணி நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து பொது அளவு நிதிநிலை அறிக்கையினை தயார் செய்க.

| விவரம் | 31 மார்ச் 2016 | 31 மார்ச் 2017 |
|---|---|---|
| I பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் | | |
| பங்குதாரர் நிதி | 5,40,000 | 6,00,000 |
| நீண்டகால பொறுப்புகள் | 2,70,000 | 2,50,000 |
| நடப்பு பொறுப்புகள் | 90,000 | 1,50,000 |
| மொத்தம் | 9,00,000 | 10,00,000 |
| II சொத்துக்கள் | | |
| நீண்டகால சொத்துகள் | 7,20,000 | 8,00,000 |
| நடப்பு சொத்துகள் | 1,80,000 | 2,00,000 |
| மொத்தம் | 9,00,000 | 10,00,000 |

**(அல்லது)**

ஆ) பின்வரும் தகவல்களில் இருந்து அனு நிறுமத்தின் போக்கு சதவீதங்களை கணக்கிடவும்.

| விவரம் | ரூ. ஆயிரத்தில் | | |
|---|---|---|---|
| | முதலாம் ஆண்டு | இரண்டாம் ஆண்டு | மூன்றாம் ஆண்டு |
| I பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் | | | |
| பங்குதாரர் நிதி | 500 | 550 | 600 |
| நீண்டகால பொறுப்புகள் | 200 | 250 | 240 |
| நடப்பு பொறுப்பு | 100 | 80 | 120 |
| மொத்தம் | 800 | 880 | 960 |
| II சொத்துக்கள் | | | |
| நீண்டகால சொத்துகள் | 600 | 720 | 780 |
| நடப்பு சொத்துகள் | 200 | 160 | 180 |
| மொத்தம் | 800 | 880 | 960 |

----------

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com